தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 14.] MADRAS:—SUNDAY APRIL, 3, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

படிப்பும் அனுபவமும்.	கடிதம்.
கடைதிறப்பு.	வர்த்தமானசங்கிரகம்.
இந்துசமயசாரவிளக்கம்.	நோட்டீஸ்.

ராஜா ஸர் டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வொகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.

படிப்பும் அனுபவமும்.

படிப்புக்கும் அனுபவத்திற்கு மிருக்கிற வித்தியாசத்தை நாம் அசட்டைசெய்யலாகாது. நலகிரந்தங்களிலிருந்து நீந்தும் வகை கற்றறிந்த ஒருவன் சில நிமிஷமாவது நீந்தி மிதக்கவல்லனுகான்; ஆனுலோ, நீந்தக்கற்று அனுபவப்பட்டவன் சுலபமாய்ச் சந்தோஷத்துடனே நெடுநேரம் நீந்துவான். எழுத நமக்கு நன்றுய்த் தெரியும. நம்முடைய இரண்டு கைகளும் நம்மதே; ஆயினும், வழக்கத்தினுலே வலதுகைக்கும் இடதுகைக்கு முண்டாயிருக்கிற அதிக வித்தியாசத்தை நாம் கவனிககவேணடும். வலதுகையினுல் சுலபமா யெழுதுகிறோம். இடதுகையினு லெழுதுவதரிது. இதை யோசித்துப்பார்ப்போமாகில், படிப்பினுலமாத்திரம் கியான மடைந்திருப்பவனைப்பார்க்கிலும் அனுபவசாலியான தொழிலாளியை உலகத்தார் ஏன் அதிகமாய் மதிக்கிருர்களென்று சுலபமாய்த் தெரிந்துகொள்வோம். ஆகையால் படிப்புகியானத்தோடு அனுபவத்தையும் சேர்க்கவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால், அனுபவசாலியானவன் வெறும்படிப்புக் கியானியை முறியடித்து மிஞ்சுவான்; அப்போது அந்தக் கியானி முறையிட்டா லாவதொன்றுமில்லை. கலவிச்சாலைகளிலும் காலீஜுகளிலுமிருந்து நூதனமாய் வெளிவந்த வாலிபர்கள் வெறும்படிப்புக் கியானமாத்திர மடைந்தவர்களா யிருக்கிருர்கள். அனுபவசாலிகளுமாகித் தங்கள் மதிப்பை உயர்த்திக்கொளள அவர்கள் பாடுபடவேண்டும்.

கடைதிறப்பு.

(ஜோசெப் சைம்ஸ் அவர்சளால் எழுதப்பட்டது)

"வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே;—சூரியனுடைய மகிமையும் வேறே. சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும்வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது." 1 வது கொரிந்தியர், XV, 40, 41.

மேற்கண்ட பத்திரிகையில் எத்தனை வாக்கியங்களிருக்கின்றனவோ அத்தனை ஆபாசங்களிருக்கின்றன. பிரேதத்தை மண்ணுக்கும்படி அடக்கஞ் செய்யும்போது பிரேதக் குழியண்டை பாதிரியார் நிறைவேற்றுகிற சடங்கில் முக்கிய பாகமாயிருக்கிற அத்தியாயத்தில் மேற்படி வாக்கியங்கள் வருகின்றன: "அது மரித்தவன் நித்திய ஜீவியாய் வாழும்படி சந்தோஷத்துடனே உயிர்த்தெழுந்திருக்கும்படியானகோரிக்கையே." மரித்தவன் உயிர்த்தெழுந்திருக்குஞ் சித்தாந்தததில் நம்பிக்கைவைப்பதற்கு நிச்சயமாகவே நியாயமொன்றையுங் காணேம்; யோசனு புருஷனுகிய கிரிஸ்தவனுடைய நம்பிக்கையை அழிப்பதறகு ஒன்றையொன்று மிஞ்சினது ஏதாவதிருககுமாயின் அது உயிர்த்தெழுந்திருக்குஞ் சித்தாந்தத்தை எவருடைய வார்த்தைகளின்பேரில் ஒப்புகொள்ளுகிருனே அவர்கள் மற்ற விஷயங்களைப்பற்றி ஆபாசமாகக் கூறியிருக்கிருர்களென்று கண்டறிந்துகொள்வதுதான். கடவுளனுக்கிரகம் பெற்றவர்களென்று சொல்லிக்கொண்டபோதிலும் சடமாகிய பிரபஞ்சத்தைப்பற்றிசுத்தமூடாகளாயிருந்தவர்களிடத்து என்ன நம்பிக்கை வைக்கக்கூடும்! எவர்கள் பிரபஞ்சத்தைப்பற்றி ஆபாசங்களைக் கூறியிருக்கிருர்களோ, எவர்களுடைய முக்கியமான சித்தாந்தங்கள அந்த ஆபாசஙகளை ஆதாரமாகக்கொண்டிருக்கின்றனவோ அப்படிப்பட்டவர்களிடத்து நாம் என்ன நம்பிக்கை வைக்கக் கூடும்?

புதிய ஏற்பாட்டு வேத புஸ்தகத்திலுள்ள சகல தத்துவங்களும் வான சம்பந்தமான பொருள்களுக்கும் பூமிசம்பந்தமான பொருள்களுக்கும் முக்கிய விகற்பத்தைப் போதிக்கின்றன; இந்த விகற்பத்தையே கிரிஸ்து மதம் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தின் தன்மையை—அதவா, அடுத்தாற்போல நம்மைச் சூழ்ந்து நிற்கிற பிரபஞ்சபாகத்தின்தன்மையை—மனிதர்கண்டறிந்திராவிட்டால்,காலாந்தவரையில் இந்த ஆதாரத்தின்பேரிலேயே அந்த மதம் நிலைபெற்றிருக்கத்தக்கதே. ஆனுல், உண்மை யறிந்துகொள்ளப்பட்டது,பிழையையும்தேவஅருள்வாக்கென்பதையும் அவசியம் தூற்றவேண்டிவந்தது. நவீனமான சாஸ்திரத்திற்கு வந்தனம். இதனுலே, வானத்திற்கும் பூமிக்கும் பூர்வகாலத்தில் மனிதர்களால் விதியில்லாமல் கற்பிக்கப்பட்ட பேதம் உளறலென்றும், பிரதியசகாப்தங்களில் அது திருத்தப்பட்டதென்றும் நாம் தெரிந்துகொள்ளுகிறோம்; மனிதர்கள் உண்மையை யேற்றுக்கொள்ளுகையில் பூர்வீக பிழைகளைத் தள்ளவேண்டியதுபோலவே, அப்படிப்பட்ட பிழைகளில் முழுகியிருக்கிற சகலத்தையும், அவற்றை ஆதாரமாகக்கொண்டிருக்கிற சகலத்தையும், மற்ற மூடபக்திகளுக்குளளே கிரிஸ்தவ ரிவிலேஷன் என்னும் வெளிப்படுத்தப்பட்ட வாக்கியங்களனைத்தையும் தள்ளவேண்டியவர்கள்தான். உள்ளபடி சங்கதி என்னமாயிருக்கிறதென்று பார்ப்போம்.

1. காபர்னிகஸ் என்பவராற் செய்யப்பட்டு, காபர்னிகன்ஸிஸ்டம் ஆவ் அஸ்திராஞெமி யென்று வழங்குகிற வான சாஸ்திர ஏற்பாட்டை யறிந்திருப்பவ ரெவரும் அந்த ஏற்பாட்டின் மத்திய ஸ்தானத்தை சூரியன் கொண்டிருப்பதாக அறிந்தே யிருக்கவேண்டும்.—அந்த ஏற்பாடு (ஒரு தோராயமாகக்கூறமிடத்து) ஒரு பொதுஸ்தானத்தைக் கொண்டிருப்பதாகச் சொலலும்படியான ஏற்பாடே. வாசிப்பவர் குறுக்களவிலே சுமார் 600,00,00,000 மயல்விரிந்த வட்டமான ஒரு மகாசமுத்திரத்தைப் பாவித்துக்கொள்வதினுல் கிட்டத்தட்ட என் கருத்தை யறியலாம். இந்த சமுத்திரத்தின் மத்தியில் சூரியன் தன்னுடைய காத்திரத்தில் பாதியை தண்ணீரில் அமிழ்த்திக்கொண்டு மிதக்கிருன். சுமார் 3,60,00,000 மயல் தூரத்திலே சூரியனைச்சுற்றி மிதந்துகொண்டு, புதன் இருக்கிருன். சுமார் 6,60,00,000 மயலிலே சுக்கிரன இருக்கிருன். 9,15,00,000 மயல்தூரத்திலே பூமி சுற்றிக்கொண்டிருக்கிறது; அங்காரகன் கிட்டத்தட்ட 14,00,00,000 மயலிலிருக்கிறது. (கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற) இருநூற்று இருபத்திரண்டு சிறுகிரகங்கள் சராசரியில் சுமார் 25,00,00,000 மயல்தூரத்திலே சூரியனைச் சுற்றிவருகின்றன; பிரகஸ்பதி 47,60,00,000 மயலிலும், சனி 87,80,00,000 மயலிலும், யூரனஸ் 175,35,90,000 மயலிலும், நெப்ட்டியூன் 274,55,00,000 மயலிலும் வருகின்றன. தூமகேதுக்களையும் உபக்கிரகங்களையும் பிரஸ்துதத்தில் நீக்கிவைப்போம். இந்தப் பாவனையான சமுத்திரத்தின் உதவியைக்கொண்டு அண்டகோள அடுக்குகளை ஒருவிதமாயில் அமைத்துக்கொண்டதினுல், அதை இப்போது தள்ளிவைத்துக் கிரகங்களைப்பற்றி ஆலோசிப்போம்.

நாம் சூரியனைப் பார்க்கும்போது அது ஆகாயவெளியிலிருப்பதாகக் காணுகிறது; அது மற்ற கிரகங்களினுப்பந்தமாக வேயிருக்கிறது—அவற்றை ஆகாயத்தில் தவிர வேறெங்கும் நாம் பார்ப்பதில்லை. புதனும் சுக்கிரனும் சூரியனஸ்தமித்தவுடனேயாவது சூரியோதயமானவுடனேயாவது சூரியனுக்குத் தொலைதூரத்தில காணப்படுவதில்லை. சூரியனுதித்து மேலே வந்தபின்பும் தென்கீழ்த்திசைவானத்தில் சுக்கிரன் பளபளப்பான பிரகாசத்துடனே சொலித்துக்கொண்டிருப்பதை நாம் நன்றுய்க்காணலாம். மற்றக்கிரகங்களும் அங்காரகனும் பிரகஸ்பதியும் சனியும் 'ஜோடியாக்' என்று சொல்லப்பட்ட ராசி

வட்டப்பாதை நெடுக ஆகாயத்தில் சிலவருஷகால அளவிலே ஒழுங்காய்ச் சுற்றிவந்து சேருவதைக் காணலாம். பிரகஸ்பதியும் சனியும் தற்காலத்திலே கிட்டத்தட்ட இராமுழுவதும் கண்ணுக்குப் புலப்படத்தகக கிரகங்கள்.

மேலே குறித்த தோற்றங்களைப் பூர்வீகாள் அறிந்திருந்தார்கள், தோறறங்களை உண்மையானவையாகவே எண்ணியிருந்தார்கள்; பூமி ஆகாயவெளியிலிருப்பதாக அவர்கள் அறிந்ததில்லை, ஒரு நட்சத்திரத்தைப்போல அதற்கு ஒளியிருக்கிறதென்று தெரிந்துகொண்டாரில்லை. ஆகையால் பூமியானது இருள் சூழ்ந்த கறடுமுறடான இழிந்த உருவென்று முடிவுகட்டியிருந்தார்கள். வானம் அல்லது ஆகாயவிரிவிலுள்ள உருக்களோ அவர்களுக்கு பிரசாசமும் மகிமையும் பொருந்திய வேருன தன்மையுள்ளவையாயிருந்தன. இப்படிப்பட்ட ஆபாசமான எண்ணத்திலிருந்துதான் சகல சித்தாந்தங்களு மேறபட்டன; வான வுருக்களும் பூமியும் வேற்றுமையுள்ளவையாயின; வானத்திருமேனிகள் (?) பூமிக்கு அளவற்ற பங்கு மேன்மையடைந்திருந்தன; பூமி இருள்சூழ்ந்ததாயும் வானவுருக்கள் ஒளிநிறைந்ததாயு மேறபட்டன; பூமியில் வசிப்பவர்கள் மூடர்களானுர்கள், ஆகாயத்தில் வசிப்பவர்கள் அளவற்ற ஞானமுடையவர்களாய், நமக்குக் கற்பனை கொடுக்கத்தக்க கிருபாசமுத்திரமானுர்கள். பூமியும் அதிலுள்ள சகலவாசிகளும் பரிசுத்தமில்லாத பாபிகளானுர்கள், ஆகாயவாசிகளுக்கு விரோதமாய் நாம் பாவஞ் செய்கிறபடியால், நமக்குப் பரிசுத்தத்தையும் மன்னிபபையும் ஈந்தருளத்தக்கவர்களானுர்கள்!

மடமையும் குரு அதிகாரமுமாகிய கலக்கமுற்றஇராக்காலத்திலேஇவ்வாறுபூர்வீகாள்கனவுசண்டார்கள், ஆனுல் இவையெல்லாம் உளறலேயென்றுஉண்மைநமக்குப்போதிக்கின்றது. பூமியானதுமற்றக்கிரகங்களைப்பார்க்கிலும்இருண்டதல்ல. சூரியனுடைய ஒளிப்பிரதிஜொலியினுல் அவையெல்லாம்பிரகாசிக்கின்றன; அப்படியே பூமியும் பிரகாசிக்கிறது. நமது குடியிருப்பு வீடாகிய இவ்வுலகு அவற்றைப்போலவே பிரகாசம் பொருந்தியது. சந்திரன் இரண்டாம்பிறை அல்லது மூன்றும்பிறையாயிருககும்போது, (புது சந்திரன் பழைய சந்திரனைமார்பில் அணைத்துக்கொண்டிருக்கிறதென்று ஐரோப்பிய ஜனங்கள்சொல்லிக்கொண்டபடி) ஒளிவிளிம்போடுங் கூடிய பாதிவட்டத்திற்கு அதிகமாகவே மங்கலான சிவப்பு உருவாயிருப்பதைக் காணுகிறோம். அந்தத் தேய்வீகமான (?) சிவப்பவொளி பூமியின் ஒளியே; பூமிக்குச் சந்திரன் துணைபுரிவதபோல சந்திரனுக்கு பூமி துணைபுரிகிறது. எவ்வளவேனும் சந்திரன் தோன்ருத அமாவாசியையாயிருக்கும்போது பூமி பூரணவொளியுள்ளதாயிருக்கிறது; அப்போது, பதின்மூன்று பதினுன்காம்நாள் வளர்பிறைச் சந்திரனிலிருந்து நமக்கு வருகிற ஒளிக்குச் சமானமான பூமியின் பூரணபிரகாசத்தில் சந்திரன் அமிழ்ந்திகிடக்கிருன். நாம் சந்திரனிடத்தில் போயிருப்பதாகப் பாவித்துக்கொள்வோம். அப்போது ககல காரியங்களுக்குஞ் சந்திரன் நமக்கு பூமியாயிருக்கிறது; ஆனுல் பின்னுஞ் சிறியது, முக்கியமல்லாத சிலவிஷயங்களிலேவித்தியாசமுள்ளது. நாம் சந்திரனிலிருக்கையில் பூமி நமக்குச் சந்திரனுயிருந்துகொண்டு, நமக்கிப்போதுண்டாயிருக்கிறபடி வளர்பிறை தேய்பிறை அமாவாசியை பூரணை முதலிய சகல திதிகளையுங் கொடுத்துக்கொண்டிருக்கும். நாம் இப்போது இடங்களை மாற்றிக்கொண்டோமல்லவா? பூமி ஆகாய வெளியிலிருக்கிறது, சந்திரன் நமது காலடி மிதியிலிருக்கிறது. இப்போது பூமியும்பிரபஞ்சத்திலுள்ள மற்றென்றைப்போலவே பிரகாசம்பொருந்திய வானத்திருமேனியாயிருக்கிறது.

இந்த ஆராய்ச்சியினுல்லே, பூமியானது ஆகாயவெளியில் நாம நிந்திருக்கிற யாதொரு உருவைப்போலவே யொரு உருவாயிருக்கிறதாகத் தெரியவருகிறது; இவ்வகையான ஆராய்ச்சி பின்னுங் கொஞ்சஞ் செய்வோமாகில், யாவும் ஸ்பஷ்டமாய் விளங்கும். (பிரகஸ்பதிவெகுதூரத்திலிருப்பதால் அதிலிருந்துகொண்டு பூமியைப் பார்க்கத் தவறிப்போவோம்.) நாம் அங்காரகனிலிருப்பதாகப் பாவித்துக்கொள்வோம்; அவ்விடத்திருந்து நாம் சூரியனைப் பார்க்கும்போது, அது உருவத்தில் சிறிதாகவும் பிரகாசத்தில் குறைவாகவுந் தோற்றும். பூமியும் இப்போது பிரகாசமுள்ள காலைநட்சத்திரம்போலவும் பின்பு மாலைநட்சத்திரம்போலவும் மிக்க பிரகாசம்பொருந்திய கிரகமாகத் தோற்றுகிறது. நாம் டெல்லெஸ்கோப் கண்ணுடிக் கருவியினுல் பார்ப்போமாகில, சுக்கிரன் அல்லது புதன் மாறிமாறி வளர்பிறைதேய்பிறைரூபமாகத்தோன்றுவதை நாம் இப்போது காண்பதுபோலவே பூமியையுங் காண்போம்.

நாம் சுக்கிரனில்போயிருந்தால் அப்போது பூமியை, நாம் இராசி வட்டவழியாய் அங்காரகன் செல்வதை இப்போது கவனமாய்ப் பார்த்தறிவதுபோலப் பார்ப்போமாகில் பூமியானது வருஷங்கள் செல்லச்செல்ல அந்த ராசிவட்டவழியாய் ஒழுங்காகச் செல்வதைக் காண்போம். மேற்கண்ட விஷயங்களில் ஒவ்வொன்றிலும், நாம் வசிக்கிற அந்தந்த கிரகமும் நமது காலடிமிதிக்குட்பட்டதாகவே யிருக்கும்.—பிரஸ்தாபத்திலிருக்கிற உருவாகிய கிரகம் அங்காரகனுயினும், சுக்கிரனுயினும், பூமியாயினும், காலை - மாலை - நடுஇராக் காலத்து வானத்தில் பளபளப்பான வைரக்கல்போலக் காணப்படும். இவ்விதமாய் நாம், நமது பூர்வீகாள் பூமிக்கு அதிசமீபமாய்த் தங்கள் வெளிச்சத்திலேதானே யிருந்ததனுல் அதனுடைய மேன்மையை அறியக்கூடாதவர்களாயிருநதபடியால அவாகள் பூமியை அலட்சியஞ் செய்தார்களென்றும்; தூரத்தினுல் திருஷ்டிக்குப் பிரமையுண்டானபடியாலும், அவற்றின் ஸ்தானபேதத்தினுல் புத்தி மயங்கியபடியாலும், அவர்கள் கண்ட மற்ற கிரகங்களை ஒருமிக்க அதிமேலான சிறநத வகுப்பு (தேவ) ஸ்வரூபங்களென மதித்தார்களென்றும், தெரிந்துகொள்ளுகிறோம். எப்போது மனிதர்கள் அப்படிப்பட்ட மூலாதாரமான விஷயங்களில் மோசம்போனுர்களோ அப்போதே தெய்வீக சித்தாந்தங்களேற்பட்டன. பிரபஞ்சத்தின்தன்மையைத் தெரிந்துகொண்டவனெவனும் வானத்திலிருந்து வேதத்தை யொருக்காலும் பெற்றுக்கொண்டவனல்லன்; இந்தப் பிரபஞ்ச தத்துவக் கியானத்தை மனிதர்கள் ஒருக்கால் தாராளமாய்அடைந்திருப்பார்களாகில், அது எவ்வளவேனும் கிருபையில்லாமல் மனிதர்கள்மேல் கொடுங்கோலரசு செலுத்திவந்த வைதிக கனவுகளை எப்போதும் ஹதமாக்கிவிடும்.

(இன்னும்வரும்.)

A. M.

இந்துசமயசாரவிளக்கம்.

முத்தேவர்களுற்பத்தி.

(47-வது பக்கத்தொடர்ச்சி.)

விநாயகபுராணம்.—(2) எல்லாங் கடந்த தத்துவமுடிவிலே பரப்பிரம சொரூபமாகியிருந்த பரமாத்மாவானவர் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள (3) சீவாத்துமாக்களெல்லாம் கன்மங்கட்கிடான சரீரங்களை எடுத்து, தாபத்திரயாக்கினிகளாற் றகிக்கப்பட்டு வருந்தும் துயரங்களை நீங்கிச் சிறிது இளைப்பாறும்படித் தமமிடத்தி லொடுக்கி வைத்துக்கொண்டிருந்து;—(4) பிரளயம் நீங்கியவுடன் முன்போலவே அவைகட்குத் தனுகரண புவன போகங்களைத் தந்து, கன்மங்களைப்புசிப்பித்து, அக்கன்மவொப்பில் மலசம்பந்தமாயிராநின்ற பாசபந்தங்களைப்போக்கி, முத்தியிற்சேர்க்குநிமித்தம்,—மீளவுஞ் சிருட்டி திதி சங்காரங்களை நடப்பிப்பதற்கு (5) வக்கிரதுண்டவிநாயக அவதாரஞ் செய்து, தமது முக்குணங்களினின்றும் திரிமூர்த்திகளுதித்துவருமாறு அவர்கட்கு உருவையும் அறிவையு முண்டாக்கி யருள; அவர்கள் உற்பத்தி யாகித், தங்களைப் படைத்த பரப்பிரமசொரூப மின்னதென்று அறியவேண்டி. வெறும்வெளிகளெங்குந் தேடிக் காணுமல், ஆயிரம் தேவவருடம் தவஞ்செய்தார்கள். (6) வக்கிரதுண்டருக்குக் கிருபை சுரந்து, கோடிசூரியப்பிரகாசத்திலும் அதிக சோதியை வீசுகின்ற திருவுருக்கொண்டு, சரப்பளி பதக்கமுதலிய சகல பூஷணுலங்கிருதராய், கத்தி கேடயமுதலிய ஆயுதங்கள் தரித்தவராய். மதத்தைப் பொழிகின்ற யானைமுகமும் நான்கு கையும் இரண்டுகாலும், (ஆனுல்) சகல லோகங்களையும் ஓர் நொடிப்போதில் பஸ்மீபடலமாக்க வல்ல நுதல்விழியுங்கொண்டு அம்மூவர்களெதிரிற் பிரத்தியக்ஷமானுர். அவர்கள் கண்டு களித்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஆனந்தக்கூத்தாடி தோத்திரஞ் செய்தார்கள்.

(2) விளக்கம்—பரப்பிரம சொரூபமென்பதும், பரமாத்மாவென்பதும் இன்னதென்று விளங்கக் கட்டினுரில்லை. அதைக் கண்டவர் யாரோ, அந்தப் பெயரிட்டவர் யாரோ? யோனிபேதங்களின் தொகை யேற்படுத்தினவர்கள் மகா புத்திமான்களா யிருக்கவேண்டும்! இதில் ஒன்றுஏறவாவது குறையவாவது இராதாக்கும்? இன்னும் கண்டறியப்படாதவைகளும் இனி உற்பத்தியாகவேண்டியவைகளும் எத்தனையோயிருந்தபோதிலும், கடவுளருளிய வேதமுதலியவற்றுற் கண்டறிந்து வரையறுத்திருக்கிற அதிசயத்தை வாசிப்பவர்கள்தான் ஆலோசிக்கவேண்டும்.—

(3) சீவாத்துமாக்களெல்லாம் சரீரமெடுத்து வருந்துவதினின்றும் சற்று இளைப்பாறும்படி பிரளயம் நீங்

கும்வளையில் தமதிடத்திலொடுக்கி வைத்துக்கொள்ள சிற்றருள்காட்டிய கடவுள் எப்போதும் தம்மிடத்து வைத்துக்கொள்ளும்படியான தமது பேரருளைக்காட்டலாகாதா? கிருபாசமுத்திரருக்கு இவ்வளவு கோபமும் வஞ்சமுமா? ஆன்மாக்களைப் பிரளயம் அடித்துக்கொண்டுபோய் நாசஞ்செய்துவிட்டால், மறுபடி சிருஷ்டிக்குப் புது ஆன்மாக்கள் அகப்படாவென்கிற அச்சத்தினாலோ, பழய கன்மங்களுக்கீடாய் பழய ஆன்மாக்களே அலையவேண்டுமென்கிற எண்ணத்தினாலோ அப்படி யடக்கிக்கொண்டனர்?

(4) பிரளயம் நீங்கினவுடன் ஆன்மாக்களுக்கு போகங்களைத் தந்து, கன்மங்களைப் புசிப்பித்து, * * பாசபந்தங்களைப்போக்கி, முத்தியிற் சேர்க்கு நிமித்தம் சிருட்டிமுதலியவை நடத்தத்தொடங்கி இப்போது நான்காவது யுகம் நடக்கிறதென்றாவது சொல்லலாமே யுகத்துக்கு யுகம் பாபம் வளர்ந்துவருகிறதென்று புராணங்களும் கதைகளும் முறையிடுவதுமன்றி, இப்போது ஜனங்களும் சொல்லிக்கொள்ளுகிறார்களே. இன்னும் முத்தியில் சேர்ப்பது எப்போது? கடவுளுடைய எண்ணம் குலைந்துபோகிறதே. கலியுகமுடிவில் பிரளயத்தினால் மறுபடியழிப்பதே முத்தியாக்கும்? முன்னேயழித்ததினாலென்ன பிரயோசனம்? கன்மமாவது தொலையவில்லை; 'பழயகுருடிகதவைத்திறடி' என்றே யானதைப் பார்க்கினும், அழிக்காமல் விடுவது நலமாயிருந்திருக்குமே; கடவுளுக்கும் மார்பால் நகர்ந்து மண்ணெடுத்த வீண் பிரயாசையும் நீங்கியிருக்குமே. சிறுமிகள் மண்ணாற் சிறு வீடு கட்டி விளையாடி அயர்வுற்று வெறுத்து; அதை யழித்து மறுபடி வேறேவீடு கட்டுவதையொத்திருக்கிறது.

(5) சிருட்டி செய்வதற்கு பரப்பிரமம் யானைமுகசொரூபமெடுப்பானேன்? அது அவருடைய சித்தமாக்கும்! தான் படைக்கப்போகிற சிருஷ்டியை யுணர்ந்து அவ்வுருவமெடுத்தனரோ, அல்லது யானையையும் மனிதனையுங் கண்டவர்கள் இருதிறத்து அவயவங்களையுஞ் சேர்த்து அவ்வுருவேற்படுத்தினார்களோ யோசிக்கவேண்டும்.—மனிதர்களுக்கிருக்கிற இராசதம்-சாத்துவிகம் தாமதம் என்கின்ற முக்குணங்களும் கடவுளுக்குமிருக்கின்றமையால்,அவரும் மனிதர்களைப்போலத்தான் நடப்பவர். இதில் விநாயகர்வழியாய் திரிமூர்த்திகள் உற்பத்தியானார்களென்று சொலலியிருக்கிறது; சைவத்திலோ, முத்தொழிலின்பொருட்டு பரப்பிரமம் முத்தேவர்களாகச் சகளீகரித்ததென்று சொல்லியிருக்கிறது; வைஷ்ணவத்திலோ, மூலகாரணனாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய நாபிகமலத்தில் பிரமன் தோன்றி, பிரமனுடைய முகத்தில் சிவன் தோன்றினதாகவும் சொல்லியிருப்பதுமன்றி, விநாயகனை ஒரு ஏவலாளாக அதோகெதியில் தளளி யிருக்கிறது.—அன்றியும் முன் பத்திரிகையிலே, பிரமா, விண்டு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம், பரம், பராபரம், இவை ஒன்றிலொன்று ஒடுங்கியதாகச்சொல்லியிருக்கிற முறையே தோற்றமுண்டாகாமல், பராபரமொன்றுமே பரப்பிரமசொரூபமாய் விளங்கி, வக்கிரதுண்டவிநாயக அவதாரஞ் செய்ய, அவருடையமுக்குணங்களினின்றும் நேராய் மும்மூர்த்திகளுண்டானதினால், இடையிலொழிந்த சிவம் சத்தி முதலியவற்றைப் பிடித்த பீடை ஒழிந்தேபோயிற்று—படைக்கப்பட்ட திரிமூர்த்திகள் குழந்தைகளாக உற்பவியாமல் நல்ல ஆள்களாகஉற்பத்தியானதாய்த் தெரியவருகிறது அவர்கள் தங்களைப்படைத்தது எதுவோவென்று சந்தேகியாமல் பரப்பிரமசொரூபமென்றுகிரகித்தது அவர்களுக்குஅளிக்கப்பட்ட அறிவின்பயனாயிருக்கலாம். அவர்களெங்கெங்குதேடியுங்காணாதிருக்கும்படி, யானைத்தலையும் துதிக்கையும்செவியும்நான்குகையும்இரண்டுகாலும்பேழைவயிறுமுடைய சடவுருவாயிருக்கிற வக்கிரதுண்டன் எங்கேபோய் ஒளித்தனனோ? அல்லது பழயபடி பிரம்மமாகி, "முப்பாழும்பாழாய் முடிவிலொருசூனியமாய் அப்பாலும்பாழாயறும்" என்று நாயனாரருளிய இடம்புக்கனனோ!—எங்கும் வெட்டவெளியாயிருந்ததனால், பிரபஞ்சத்திலுள்ள உருக்கள் ஆகர்ஷணசக்தியினாலே ஒன்றையொன்று கவர்ந்துநிற்கின்றன வென்கிறசித்தாந்தப்படி, திரிமூர்த்திகளும் பரப்பிரமமும் ஒருவரை யொருவர் கவர்ந்துகொண்டு அந்தரத்தில தொங்கினார்களாக்கும்.—பிரமத்தைக் காணாமுன்னமே மும்மூர்த்திகளுக்குத் தவஞ் செய்யுமுறை கற்பித்தவர் யாரோ? ஆயிரந் தேவவருடம் தவஞ்செய்தார்கள். நம்முடைய ஆறுமாசகாலமாகிய உத்தராயனம் தேவர்களுக்கு ஒருபகலும், ஆறுமாசகாலமாகிய தட்சணாயனம் ஒரு இரவுமாக நமது ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாளாம். இதனாலே, விடாது ஆறுமாசகாலம் உத்தராயன சூரியப்பிரகாசத்தினால் பகலும், சூரியன் தட்சணமாகத் திரும்பிவிடுவதினால் விடாது ஆறுமாசகாலம் இரவுமாயிருக்கிற பூமியின் வடமுனைச்சக்கரத்தில் வாசஞ்செய்பவர்கள்தான் (தங்கள் தேவர்கள் வடக்கே வாசஞ் செய்கிறார்களென்று ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறபடி) இந்துக்களுக்கு தேவர்களாயிருக்கவேண்டும். தென்முனை (திசை) யில் வசிப்பவர்கள் பிதிரர்கள். நமது ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாளாகிற கணக்கின்படி ஆயிரதேவவருஷம் நம்முடைய மூன்றுலட்சத்து அறுபத்தையாயிர வருஷகாலமாகின்றது. இவ்வாறு கதைக்காரர் ஆலோசியாமலெழுதி, பிரளயம் நீங்கியவுடன் சிருஷ்டிமுதலியவை நடாத்தி ஆன்மாக்களைமுத்தியிற் சேர்க்கப் பரப்பிரமங்கொண்டிருந்த திருவுளத்திற்கு உல்லங்கனமுண்டுபண்ணினார்!

(6) ஒரு சூரியனது கிரணத்தைப்போல இரண்டுமூன்று சூரியகிரணங்களைச் சேர்த்து சோதியை அளவிடமாட்டாதவர்கள் பிரத்தியட்சத்தில் கண்டு அளவிட்டவர்கள்போல வெறும்வாய்ச்சொல்லினால் எத்தனை கோடி சூரியப்பிரகாசத்தைச் சொன்னாலுஞ் சொல்லலாமே!—உலகத்திலுள்ள செக்கு, கழுமரம், சுரிவாள்போன்றவை நரகத்திலிருப்பதாகச் சொல்லியிருப்பதுபோல, உலகத்திலுள்ள ஆபரணங்களும் ஆயுதங்களுந்தவிர விசேஷமொன்றுமில்லை.—மதத்தைப்பொழிகின்ற யானை யென்பதனால் துஷ்டகுணத்தை வெளிப்படுத்துகிறேமென்று புராணிகர் யோசியாமற்போனார். நுதல்விழியின் வல்லமை வியர்த்தமாயிருந்ததைமேலே சங்காரகிருத்தியத்தில் கூறியிருக்கிறோம். முறம்போற்காதுகளும் உலக்கைபோல துதிக்கையுமுடைய விகாரமிருகரூபம் பல ஆயுதங்களைத் தரித்திருப்பதைப்பார்த்து, அம்மூவர்கள் பேயோ பிசாசோ பூதமோ வேறே என்னரூபமோவென்று மலைவுறாமல், தங்களைப்படைத்த பிரமமென்று உடனே தெரிந்துகொண்டதும் அவ்விநாயகருடைய திருவருள்தான்!

(இன்னும்வரும்.) A. M.

கடிதம்.

ஐயா பத்திராதிபரவர்களே,

சிலவாரங்களுக்கு முந்திய பத்திரிகையில், சர்வேஸ்வரன் அநாதி, வேசம அநாதி, ஆன்மா அநாதி, ஆகாயம் அநாதியென்று ஒருசாஸ்திரியார் கூறியிருந்ததாகக் கண்டிருந்ததைக் கண்ணுற்றேன். இரண்டொரு வாரத்திற்கு முந்திய பத்திரிகையில், பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கிக், கடைசியாய் நின்ற ஆகாயம் ஆன்மாவிலொடுங்கி, ஆன்மா பிரமாவிலும் பிரமா விட்டுணுவிலும், இவ்வாறாக ஒன்றிலொன்று ஒடுங்கிக்கொண்டேபோய், முடிவில் பராபரமொன்றுமே நிலைக்சதென்று புராணங் கூறுவதாகச் சொல்லியிருக்கிறது. இவ்விருவகையையும் யோசித்து, எது புராதனமோ, எது நவீனமோ வாசிப்பவர்கள் அறியவேண்டும். கிறிஸ்துமார்க்கத்தவர்கள்—தங்கள் பராபரன் பிரபஞ்சத்தை ஆறுநாள் சிருஷ்டித்து, ஏழாம் நாள் இளைப்பாறினனென்பதை நம்பித் தாங்களும் ஆறுநாள் ஜீவனத்திற்காக உழைத்து, ஏழாம் நாளை ஓய்வு நாளாக அனுஷ்டித்துவருகிறார்கள். சூரியன் இன்னும் இளம்பிராயியாகத்தானிருக்கிறானென்றும், அவனைச்சுற்றிலும் அநேகம் மயல் தூரத்திற்குத் திரவமாக ஜொலித்துக்கொண்டு சூழ்ந்து

நிற்கிற பதார்த்தம் அவனோடு சேர்ந்து பிண்டமாவதற்கு இன்னும் வெகுகாலஞ்செல்லுமென்றும், இவ்வாறாகவே ஆதியில் திரவபதார்த்தம் அணு அணுவாய்த் திரண்டு, அவ்வணுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பிண்டப்பொருளாகிப் பூமிமுதலிய சொரூபமடைந்தசற்கு எவ்வளவோகாலஞ்சென்றதாகத் தத்துவப்பிரமாணங்களினால் ருசுப்படுத்தி நிலைநாட்டியிருப்பதினால், அதை மறுக்கக்கூடாதவர்களாய், கிறிஸ்துமார்க்கப்போதகர்கள், "கோடிவிதிமாளிற் குலாவுங்கமலக்கண்ணன், ஓடிவடவாலுறங்குவான்; அக்கண்ணர் கோடியழிகில் அருணகிரி, நக்கனருள் சற்றேநகும்" என்று இவ்வாறாகச் சைவர்கள் தங்கள் சிவனுக்கு ஆயுள் விர்த்தியும் பெருமையும் சம்பாதித்துக்கொடுத்ததுபோல, தங்கள் வேதவாக்கியம் பொய்யாய்ப்போகாமல், நவீனசாஸ்திரத்திற்கு ஒத்திருக்கச் செய்யவேண்டுமென்கிற கருத்துக்கொண்டு, ஒவ்வொரு பொருளைச் செய்யத் தேவன் எவ்வளவோகாலம் மார்பால் நகர்ந்து மண்ணெடுத்தாரோ என்கிற கேள்வி பிறந்தபோதிலும் அதற்குச் சமாதானம் அப்போது பார்த்துக்கொள்வோம், இப்போது தப்பித்துக்கொள்ளவேண்டுமேயென விருப்புற்று, ஒரு சிருட்டிநாளென்பது எத்தனையோயுகமென்று போதிக்கத்தலைப்பட்டார்கள். அதுபோலவே, மேலேகண்ட ஒடுக்கம் புராதனமாயிருக்க; பரப்பிரமமு மிருப்பதற்கு ஆகாயவெளிவேண்டுமே, ஆதலால், ஆகாயமுன்னு, பிரமமுன்னுவென்றும்; கன்மங்களுக்கீடாய் ஜனனமுண்டாகிறதென்பதினால், ஆதியில் ஜனன முண்டாகிறதற்குக் கர்மம் எங்கிருந்துவந்ததென்றும், இவ்விதமான வினைக்கள் நிகழ்கின்றமையால், அவற்றிற்குச் சமாதானங்கூறவேண்டி, பிரமம், ஆகாயம் முதலியவை அநாதியென்று சொல்லத்துணிந்தார்களென்று நாம் நினைக்கவேண்டும்.—கணபதி அவதாரத்தைப்பற்றி மச்சியபுராணத்திலும் விநாயகபுராணத்திலும் வெவ்வேறுவிதமாகச் சொல்லியிருப்பதை ஒருமுகமாகப் பிரசுரஞ்செய்வித்ததுபோல; ஒரோவிஷயத்தைப்பற்றி பலபுராணங்களில் பலவாறாகக் கூறியிருப்பதை எடுத்து ஒருமுகமாகப் பிரசுரஞ்செய்துவந்தால், ஒன்றுக்கொன்று முரண்படுவதையும் அவற்றிலுள்ள ஆபாசங்களையும் வாசிப்பவர்கள் ஒருமிக்கச் சுலபமாய்த் தெரிந்துகொள்வார்களென்று நம்புகிறேன். ஆனால் அப்படிச் செய்யச்சொல்லி நான் கேட்டுக்கொள்வது சுலபமே; செய்பவருக்குக் கஷ்டமே. ஆயினும் கூடியவரையில் நடத்திவரப்படுமாகில், வெகு அனுகூலமாயிருக்குமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றனன். மன்னிக்கவும்.

பத்திரிகைப்பிரியன்.

வர்த்தமானசங்கிரகம்.

குறிப்பு.—தத்துவவிசாரணைசெய்யும் இப்பத்திரிகையில வர்த்தமானம் அவசியமில்லையென்பது சிலருடைய அபிப்பிராயம். ஆயினும், இப்பத்திரிகையின் முதலாவது சஞ்சிகையில் குறித்தபடி, இப்பத்திரிகை நிறைவேறிவருகிற ஒன்பது வருஷகாலமாய்ச் சில முக்கியமான வர்த்தமானங்கள் பிரசுரிக்கப்பட்டேவந்தன. ஆனால் சென்றவருஷம் சிலமாசங்களில் வீணர்களோடு விதிபில்லாமல் வாதஞ்செய்யவேண்டியிருந்ததால், இடம்போதாமைபற்றி வர்த்தமானம் நிறுத்தப்பட்டது. வர்த்தமானங்களையும் பிரசுரித்துவருவதாகப் பிரதமபத்திரிகையில கூறியிருக்கிறபடி நடத்துவது நமது கடமையாதலாலும், இப்பத்திரிகையோடுகூட வேறே சமாச்சார பத்திரிகை வாங்கக்கூடாமையான சில நண்பர்கள் கேட்டுக்கொண்டதினாலும், பழயபடி வர்த்தமானம் பிரசுரிக்கப்பட்டுவருகிறதென வறிக.

சென்னையில் புதுவெள்ளிக்கிழமை பண்டிகைக்காக நாளது மீ 7வ குருவாரமுதல் 11வ சோமவாரம்வரையில் (இரண்டுநாள்களும் உள்பட) ஹைகோர்ட்டும், ஸ்மால்காஸ் கோர்ட்டுகளும், பாங்கிகளும், வியாபாரச்சாலைகளும் மூடப்படும்.

மதுரை செஷன்ஜட்ஜியவர்களால் கொலைக்குற்றஸ்தாபனை செய்யப்பட்ட ஐந்து கைதிகள்பட்சத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை ஹைகோர்ட்டு அப்பெல்லேட்டுசைடில் பாரிஸ்டர்பேச எழுந்தபோது, மஞ்சூர்செய்யப்பட்டவனுடைய சாட்சியத்தின்பேரில் முக்கியமாய்க் கைதிகள் குற்றவாளிகளாக்கப்பட்டார்களென்றும், கொலையுண்டவனுடைய பிரேதம் தண்ணீரில் விழுந்துகிடந்தது இருபதுநாளைக்குக் குறையாதிருந்திருக்கவேணுமென்று சர்ஜியன் சொல்லுகிற சாட்சியம் திருப்திகரமாயில்லையென்றும், மற்ற சாட்சியத்தின்படி எட்டொன்பது நாளுக்கு மேற்பட்டுப் பிரேதம் தண்ணீரி லிருந்திருக்கமாட்டாதென்றும், சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் சொல்லி, பிரேதத்தினபேரில் தண்ணீருக்கிருக்கிற வலுவைப்பற்றி சாட்சியங் கேட்கும்பொருட்டு சென்னையிலுள்ள தேர்ந்த வைத்திய உத்தியோகஸ்தரை வரவழைக்கும்படி உத்தரவுசெய்தார்.

காசியில் விஷபேதி குறைந்துவருகிறது. அந்த வியாதி சுத்தமாய் ஒழியாவிட்டாலும், சென்றமீ 14வ சாயங்காலம் $5\frac{1}{2}$ மணிக்கு தூசிப்படலக் காற்றெழும்பி மூன்றுமணிநேரம் அடித்து, அந்தவியாதியின் விஷவித்தை வாரிக்கொண்டுபோனபடியால், இனிக்கவலைப்படாதபடி போதுமானமட்டில் ஒடுங்கிப்போயிற்று.

இந்தியாவிலே பஞ்சாப் மாகாணமொன்றுதான் பயிர்குன்றி சுத்தமாய்க்கெட்டுப்போயிற்று. வடமேற்கு மாகாணங்களிலும் அயோத்தியிலும் மாகூல் அனுகூலமாயிருக்கிறது. கடைகளில் போதுமான தானிய மிருக்கிறது, அகவிலையும் நிதானமா யிருக்கிறது. பங்காளத்திலே பலனுண்டாயிருக்கிறது; கொஞ்சம் மழைபெய்து புழுதி உழவுசெய்கிறார்கள்.

ரஷியாவிலே பாகுப்பிரதேசத்தில் சென்ற அக்டோபர்மீ 5வ கரோசின் எண்ணெய்போன்ற 'பிட்ரோலியம் (பாறைஎண்ணெய்) ஊற்றுவெடித்து வெளிப்பட்டது; அது இதுவரையிலுண்டானதைவிட மகா பெரிதென்று நம்பப்படுகிறது. 224 அடி உயரம் எழும்பி, ஒருமணிநேரத்துக்குக் கிட்டத்தட்ட 500 டன் விழுக்காடு ஒருநாளைக்கு 11,000 டன் எண்ணை கிடைத்தது. வெடிவாயிலிருந் துண்டான வாயுகர்ச்சனை பயங்கரமாயிருந்ததாம்.

பாம்பே.—தாதாபாயி நவுரோஜியவாகள் பார்லிமெண்டு மகாசபையில் சேரக்கருதி, மறுபடியும் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார். இப்போது அவர் தவறிப்போனபோதிலும், அவர் அங்கே தங்கியிருந்து, அடுத்துச் செய்யப்படும் நேமனகாலத்தில் நேமிக்கப்பட முயற்சி செய்வார்போலும். நேமிக்கப்படுவாராகில, இந்துக்களுக்குள்ளே பார்லிமெண்டில் மெம்பராவது இவர்தான்முதல். இங்கிலீஷ்சபையிலே சிலவருஷமிருப்பாராகில் வெகு பிரயோசனகாரியாவார்.

பெங்களூர்.—ஜகதாம்பாளம்மாளென்னும்இந்துசாதி12வயதுள்ள பெண் ஸ்பெஷல் அப்பர் பிரைமெரி எக்ஜாமினேஷன் என்னும் பரிட்சையில் முதல் வகுப்பிலே தேறினள்; அச்சிறுமிக்குக் கிடைததமொத்தஎண் 202. அவ்விடத்தியபாலிகாபாடசாலைப்பெண். பெண்கள் வித்தியாபிவிர்த்திவிஷயத்தில்விடாமுயற்சிசெய்துவரும் அப்பாடசாலைச் சபைத்தலைவராகிய சி. வரதராஜபிள்ளை யவர்களுக்கு நாம் நன்றிகூர்ந்த வந்தனஞ் செலுத்தவேண்டும்.

இந்தியாவிலுள்ள
சுவக்கியானிகளை
மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்
மெம்பர்களாகச் சேரும்படி
கேட்டுக்கொள்ளலாகின்றது.

கையொப்பநேயருக்கு

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3—0—0
வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தினகர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி
நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
௸	3-க்கு	0	10	0
௸	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS. No. 174, Davaraja Moodelly Street,—Madras.